1982 பிப்ரவரி 19]

அதுதான் காரணமா அல்லது வேறு என்ன நோக்கம்? என்ன என்ன பொது நோக்கத்தோடு பொதுப் பட்டியலில் சேர்த்து இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கல்வி பொதுப் பட்டியலில் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். என்ன என்ன காரணங்களுக்காக அப்படிக் கொண்டு வந்திருக்கிறோம். என்ன என்ன செய்யப் போகிறோம் என்று அவர்கள் சொல்லவில்லை. அதைச் மாண்புமிகு உறுப்பினர் சொல்வார்களானால் நாம் தெரிந்துகொள்ளலாம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 42—வது அரசியல் சட்டத் திருத்தம் வந்தபோது கன்கரன்ட் லிஸ்டிற்குக் கொண்டுபோகப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மறுபடியும் அந்த 42-வது திருத்தத்தை முழுவதும் மாற்றியபோது இதைமட்டும் திருத்தி அமைக்காத நிலை இருக்கிறது. இந்த நிலைமையினால் அமைச்சர் அவர்கள் சொல்கிற முயற்சிகளை எடுக்கிற நேரத்திலே இந்த அவையிலேயே ஏக மனதாக அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானமாக நிறைவேற்றி மாநிலப் பட்டியலில் அதைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிற முயற்சியை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அதுகுறித்து நான் யோசிக்கின்றேன்.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி

*வினா எண் 267— திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் முதுகலை வகுப்புகள் (M.A.Ec., M.A.His, M.S.C.) தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் (1981—82) இவ்வாண்டு முதல் எம்.ஏ. வரலாறு தொடங்கப்பட்டுள்ளது.

எம். ஏ. பொருளாதாரம், எம்.எஸ்ஸி. போன்ற வகுப்புகள் தொடங்க திட்டம் ஏதும் இல்லை.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவரவர்களே. புதுக்கோட்டை கல்லூரி நூற்றாண்டு விழா நடத்தியிருக்கிறது. நூறு ஆண்டுகள் ஆன அந்தக் கல்லூரியில் இவ்வாண்டு முதல் எம்.ஏ. வரலாறு தொடங்கப்பட்டுள்ளதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், கல்வியமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டம் ஆகையால் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் எம்.ஏ. (எகனாமிக்ஸ்,) எம்.எஸ்.ஸி. பட்டப் படிப்புகளையும் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே அந்தக் கல்லூரிகளில் எது தேவை என்பதை உணர்ந்து அங்குள்ள முதல்வரவர்கள் அதற்குரிய விவரங்களோடு பல்கலைக் கழகத்திற்கு மனுச் செய்ய வேண்டும். அதை அவர்கள் பரிசீலித்த பிறகு அது சார்பான இன்னொரு சிறப்புச் குழு இருக்கிறது அதிலே முடிவெடுப்பார்கள். ஆகவே என்ன தேவை என்று பல்கலைக் கழகத்திற்கு மனுச் செய்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. திருமாறன்; பேரவைத் தலைவரவர்களே ஏற்கெனவே புதுக்கோட்டை மன்னர் கல்லூரி முதல்வரவர்கள் இதுபோன்ற எம்.ஏ. (எகனாமிக்ஸ்) எம்.எஸ்ஸி. போன்ற வகுப்புக்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை வறட்சி மாவட்டம். ஆகவே, அங்கேயுள்ள மாணவர்கள் காரைக்குடிக்கோ அல்லது திருச்சிக்கோ செல்வதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவே, இந்த ஆண்டே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு தலைவர் அவர்களே, அதை அந்தக் குழுவிலே பரிசீலித்து முடிவெடுத்தால் அரசு அதைச் செய்யும். அரசே எந்தக் கோர்ஸையும் கல்லூரியில் ஆரம்பிப்பது இல்லை.

சென்னையில் உச்சநீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை அமைக்கும் திட்டம்

*வினா எண் 268— திரு. நா. பழனிவேல். திரு. து. புருஷோத்தமன், திரு. எம். சின்னசாமி திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச் ஒன்றை அமைக்க வேண்டுமென்று மைய அரசை, நமது மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) உச்ச நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றை சென்னையில் அமைப்பதற்கு மைய அரசின் இசைவு வேண்டியுள்ளது. எனவே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசுக்கு இம்மாநில அரசு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வேண்டுகோள் விடுத்தது, இம்மாநில அரசின் செயற்குறிப்பின் மீது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்தினை மைய அரசு